# அம்ரிதா பல்கலைக்கழகத்தற்கு உயர் மேன்மைக்கான எஃப்ஐசிசிஐ தேசிய விருது

கோவை, நவ 29

அம்ரிதா பல்கலைக்கழகத்தின் யுவியு என்ற திறந்தநிலை மின்கற்றல் தீர்வானது, 2016ம் ஆண்டின், தொழில்நுட்பத்தில் உயர்மேன்மைக்கான ஃபிக்கி தேசிய விருதை வென்றிருக்கிறது. 12வது ஃபிக்கி உச்சிமாநாட்டுக்கான நிகழ்வில் நிதி ஆயோக் துணை தலைவரான டாக்டர். அர்விந்த் பனகரியா அவர்களிடமிருந்து அம்ரிதா பல்கலைக்கழகத்தின் மின்கற்றல் ஆய்வு பரிசோதனையகத்தின் இயக்குநர், பேராசிரியர் கமல் பிஜ்லானி அவர்களால் பெறப்பட்டது. இந்த நிகழ்வானது; இந்திய அரசின் மனித வளத்துறை அமைச்சர் திரு. பிரகாஷ் ஜாவேத்கர், ஆந்திர பிரதேஷ் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மற்றும் கலாச்சாரம் மற்றும் கல்விக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை இயக்குநர் மார்ட்டின் ரெய்ச்சர்ட்ஸ் ஆகியோரால் இணைந்து தொடங்கி வைக்கப்பட்டது.

இதுகுறித்து அம்ரிதா பல்கலைக்கழகத்தின் மின்கற்றல் ஆய்வு பரிசோதனையகத்தின் இயக்குநர், பேராசிரியர் கமல் பிஜ்லானி பேசுகையில், யுவியு தீர்வுக்காக உயர்கல்வியில் மேன்மைக்கான ஃபிக்கி அமைப்பின் விருதைப் பெறுவதில் அம்ரிதா பல்கலைக்கழகத்தில் உள்ள நாங்கள் அதிக கௌரவமும், மகிழ்ச்சியும் கொண்டிருக்கிறோம். இந்தியாவில், தரம் வாய்ந்த ஆசிரியர்களுக்கான கடும் பற்றாக்குறை பிரச்சனைக்கு தீர்வுகாண்பதன் வழியாக யுவியு வழங்குகின்ற மிகப்பெரிய பயன் மற்றும் மதிப்புக்கு இந்த அங்கீகாரமானது ஒரு சாட்சியமாகத் திகழ்கிறது. உயர் கல்விக்கான 11000 கல்வி நிறுவனங்களால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இது ஒரு நிகழ்நிலை ஆடியோ வீடியோ கல்விசார் செயல்தளமாகும். இதுவொரு திறந்தநிலை ஆதார தீர்வாகும் மற்றும் இந்நாட்டில் உயர்கல்வியை வளர்த்து முன்னேற்ற மடையச் செய்வதற்காக இலவசமாக வழங்கப்படுகிறது. ஆன்லைன் வகுப்பறைகள், கூட்டங்கள், பயிற்சி அமர்வுகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகளை நிறுவுவதன் வழியாக ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களோடு பிணைப்பை ஏற்படுத்த உலகளவில் எந்தவொரு இடத்திலும் இருக்கும் ஒரு ஆசிரியரை இது அனுமதிக்கிறது. மாணவர்கள் இந்த நேரடி ஆன்லைன் அமர்வுகளில் கலந்துகொள்ளலாம் மற்றும் ஆன்லைன் வழியாக அனுபவமிக்க, திறன்மிக்க ஆசிரியர்களிடமிருந்து தங்களது ஐயங்களுக்கு பதில்களைப் பெற்று தெளிவாக்கிக்கொள்ளலாம், என்று கூறினார்.